**ந.க.எண்.ஜி2/10194/2019**

**மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,**
**வேலூர் மாவட்டம், வேலூர் - 9.**
**நாள்: 31.10.2019**

**சுற்றறிக்கை**

பொருள்: **வாரிசுச் சான்று** – இணையவழி வாரிசு சான்று வழங்குதல் – சில திருத்திய வழிகாட்டு நெறிமுறைகள் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை எண் 2906/வருவாய்த் துறை நாள்:04.11.1981
2. அரசாணை எண் 581/வருவாய்த் துறை நாள்:03.04.1987
3. அரசு கடித எண் 1534/வருவாய்த் துறை நாள்:28.11.1991
4. கூடுதல் தலைமை செயலர் (ம) வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை எண்.11/2017 கடித எண்.RA 5(3)/180/2017 நாள்:09.08.2017.
5. கூடுதல் தலைமை செயலர் (ம) வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை எண்.9/2019கடித எண். RA 5(3)/180/2017 நாள்:24.09.2019.

**************

வாரிசுச் சான்று வழங்குவதற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்து தமிழக அரசாணை எண் 2906 வருவாய்த் துறை நாள் 04.11.1981, அரசாணை எண் 581 வருவாய்த் துறை நாள் 28.11.1987 மற்றும் அரசுக்கடித எண் 1534 வருவாய்த் துறை நாள் 28.11.1991 மூலமாக விரிவாக வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன. பொதுமக்கள் விரைவாக சான்றுகள் பெறும்பொருட்டு, தற்போது இணையம் - கணினி வழியாக வருவாய்த் துறை மூலம் சான்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இச்சான்றுகளில், வாரிசுச் சான்று வழங்குவது தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகள் பார்வை 4 –ல் காணும் வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை மூலம் வழங்கப்பட்டிருந்த நிலையில் தற்போது பார்வை 5 –ல் காணும் திருத்திய வழிகாட்டு நெறிமுறைகள் கீழ்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளன.

## 2. நேரடி வாரிசு(முதல்நிலை வாரிசுதாரர்கள்)

மகன், மகள், விதவை, தாய், முன்னரே இறந்துபோன மகனின் மகன், முன்னரே இறந்துபோன மகனின் மகள், முன்னரே இறந்துபோன மகளின் மகன், முன்னரே இறந்துபோன மகளின் மகள், முன்னரே இறந்துபோன மகனின் விதவை, முன்னரே இறந்துபோன மகன் வழி பேரனின் மகன் (மகனும், பேரனும் இறந்திருந்தால்), முன்னரே இறந்துபோன மகன் வழி பேரனின் மகள் (மகனும், பேரனும் இறந்திருந்தால்), முன்னரே இறந்துபோன மகன் வழி பேரனின் விதவை (மகனும், பேரனும் இறந்திருந்தால்), முன்னரே இறந்துபோன மகன் வழி பேத்தியின் மகன் (மகனும், பேத்தியும் இறந்திருந்தால்), முன்னரே இறந்துபோன மகன் வழி பேத்தியின் மகள் (மகனும், பேத்தியும் இறந்திருந்தால்), முன்னரே இறந்துபோன மகள் வழி

பேரனின் மகன் (மகளும், பேரனும் இறந்திருந்தால்), முன்னரே இறந்துபோன மகள் வழி பேரனின் மகள் (மகளும், பேரனும் இறந்திருந்தால்), முன்னரே இறந்துபோன மகள் வழி பேத்தியின் மகன் (மகளும், பேத்தியும் இறந்திருந்தால்), முன்னரே இறந்துபோன மகள் வழி பேத்தியின் மகள் (மகளும், பேத்தியும் இறந்திருந்தால்). ஆகியோர் நேரடி வாரிசுதாரர்கள் ஆவர்.

3. **<u>பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்</u>**

இணையம் மூலம் நேரடி/முதல்நிலை வாரிசுகளுக்கு வாரிசுச் சான்று கோரி வரப்பெறும் விண்ணப்பங்களுக்கு வட்டாட்சியரே சான்று வழங்க வேண்டும். நேரடி வாரிசு என்பவர்கள் இச்சுற்றறிக்கையின் பத்தி-2 ல் குறிப்பிடப்பட்டுள்ள வாரிசுகள் ஆவர். ஒரு வட்டாட்சியரின் ஆட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் 6 மாதத்திற்கு குறையாமல் ஒருவர் வசித்து இறந்திருந்தால் அவருக்கான வாரிசுச் சான்று கோரி அப்பகுதி வட்டாட்சியருக்கு இணையம் மூலம் விண்ணப்பிக்கலாம். இறந்த நபர் 6 மாதத்திற்கு குறைவான காலம் மட்டும் அப்பகுதியில் வசித்திருந்தால், இறந்தவர் ஓராண்டிற்கும் மேலாக வசித்த பகுதியைச் சேர்ந்த வட்டாட்சியரிடமிருந்து இறந்தவர் குறித்த அறிக்கையினை வட்டாட்சியர் பெறவேண்டும்.

4. **<u>வாரிசுச் சான்று கோரும் மனுதாரர் மனுவுடன் கீழ்கண்ட ஆவணங்களை கண்டிப்பாக தாக்கல் செய்ய வேண்டும்</u>**

- இறந்த நபரின் இறப்புச் சான்று அல்லது சார்ஆட்சியர்/வருவாய் கோட்ட அலுவலரிடம் பெறப்பட்ட காலத்தாமத இறப்புச்சான்று
- இறந்த நபரின் வசிப்பிடத்தை நிரூபணம் செய்வதற்கான கீழ்கண்ட ஆவணங்களில் ஏதேனும் ஒன்றினை இணைக்கப்பட வேண்டும்.

1. ஆதார் அட்டை
2. வாக்காளர் அடையாள அட்டை
3. பாஸ்போர்ட்
4. வங்கி கணக்கு புத்தகம்/ அஞ்சலக சேமிப்பு புத்தகம்
5. ஓட்டுனர் உரிமம்
6. ஓய்வூதிய ஆணை

**5(1). <u>வாழ்க்கை துணையில் (தம்பதிகளில்) ஒருவர் உயிரோடிருந்தால் - அவரே மனுதாரர் - அவர் மனுவுடன் கீழ்கண்ட ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட வேண்டும்.</u>**

- திருமணப்பதிவுச் சான்று (அ) பாஸ்போர்ட் (அ) வாக்காளர் அடையாள அட்டை (அ) ஆதார் அட்டை (அ) தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்பு பதிவு ஆவணம் (இவை இறந்தவருடைய உறவு முறையை குறிப்பிடுவனவாக இருக்க வேண்டும்)
- குழந்தைகளின் பிறப்புச்சான்று (அ) பள்ளி மாற்றுச்சான்று
- வாரிசுகள் குறித்த மனுதாரரின் சுய வாக்குமூலம்.(மனைவி விண்ணப்பதாரராக இருப்பின் மாமியாரின் பெயரும் சேர்க்க வேண்டும்)

**5(2). <u>பெற்றோர் இருவரும் இறந்திருந்தால் குழந்தைகளில் யாரேனும் ஒருவர் கீழ்கண்ட ஆவணங்களுடன் மனு செய்யலாம்</u>.**

**அ. <u>மனுதாரர் மேஜராக இருந்தால்</u>**

- பெற்றோரின் இறப்புச்சான்று
- அனைத்து வாரிசுதாரர்களின் பிறப்புச்சான்று (அ) சாதிச்சான்று (அ) பாஸ்போர்ட் (அ) ஆதார் (அ) பள்ளி மாற்றுச்சான்று (அ) தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்பு பதிவு ஆவணம் (அ) பணியாளரின் பணிப்பதிவேடு பதிவுகள்.

**ஆ. <u>மனுதாரர் மைனராக இருந்தால் பாதுகாவலர் மனு செய்யலாம். மனுவுடன் கீழ்கண்ட ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட வேண்டும்</u>**

- பெற்றோரின் இறப்புச்சான்று
- அனைத்து வாரிசுதாரர்களின் பிறப்புச்சான்று (அ) சாதிச்சான்று (அ) பாஸ்போர்ட் (அ) ஆதார் (அ) பள்ளி மாற்றுச்சான்று (அ) தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்பு பதிவு ஆவணம் (அ) பணியாளரின் பணிப்பதிவேடு பதிவுகள் (அ) வாக்காளர் அடையாள அட்டை.
- வாரிசுதாரர்களுடனான உறவுமுறை குறித்த சிவில் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட பாதுகாப்பாளர் குறித்த ஆணை.

**5(3). <u>இறந்தவர் திருமணம் ஆகாதவர் எனில் பெற்றோர் அல்லது உயிருடன் உள்ள வாரிசு எவரேனும் கீழ்கண்ட ஆவணங்களுடன் மனு செய்யலாம்.</u>**

- இறந்த நபரின் இறப்புச் சான்று.
- இறந்தவருடனான உறவு குறித்து விளக்கும் ஏதாவது ஒரு ஆவணம் (பிறப்புச்சான்று, பள்ளி மாற்றுச்சான்று போன்றவை).

- பெற்றோரின் சுய வாக்குமூலம்.

**5(4). <u>பிற நேரடி வாரிசுகளான மருமகள், பேரன், பேத்தி ஆகியோர் மனுதாரர்களாக இருந்தால் கீழ்கண்ட ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட வேண்டும்.</u>**

- ஆதார் அட்டை
- வாக்காளர் அடையாள அட்டை
- பாஸ்போர்ட்
- வங்கி கணக்கு புத்தகம்/ ஓட்டுநர் உரிமம்
- மருமகள் விண்ணப்பதாராக இருந்தால் விதவை சான்று மற்றும் மறுமணம் செய்து கொள்ளவில்லை என்ற சான்று.
- இறந்த வாரிசுகளின் இறப்புச்சான்று

**<u>5(5). தத்தெடுத்த குழந்தைகள்</u>**

தத்தெடுத்த குழந்தைகளுக்கு வாரிசு சான்று வழங்கப்படும் இனங்களில், மனுதாரர் இந்து தத்தெடுப்பு மற்றும் பராமரிப்புச் சட்டம் 1956 –ன்படி பதிவு செய்யப்பட்ட ஆவணம் மூலம் தத்தெடுக்கப்பட்டுள்ளரா என்பது வாரிசுச் சான்று வழங்கும் வட்டாட்சியரால் உறுதி செய்யப்பட வேண்டும். மேற்படி தத்தெடுப்பு ஆவணத்தினை இணையத்தில் பதிவேற்றம் செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**<u>6. வாரிசுச் சான்று கோரும் மனு கீழ்கண்ட முறைப்படி நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்</u>**

மனுதாரர் மனுவிற்கான கட்டணமாக ரூ.60/- யினை இணைய சேவை மையம் மூலமாகவோ அல்லது ஆன்லைன் மூலமாகவோ செலுத்தலாம். மனு செய்யப்பட்ட நாளிலிருந்து 15 வேலை நாட்களுக்குள் மனுதாரருக்கு சான்று வழங்கப்பட வேண்டும்.

**<u>பணி செய்யப்பட வேண்டிய நடைமுறை</u>**

இ-சேவை மையம் →கி.நி.அ → வருவாய் ஆய்வாளர் → த.இ.து.வ. → வட்டாட்சியர்

கிராம நிர்வாக அலுவலர் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை பரிசீலித்து, மனுதாரரின் மனுவினை ஏற்று சான்று வழங்கலாமா? அல்லது நிராகரிக்கலாமா? என்பது குறித்த தனது பரிந்துரையினை காரணவிளக்கத்துடன் 5 நாட்களுக்குள் வருவாய் ஆய்வாளருக்கு அனுப்ப வேண்டும். வருவாய் ஆய்வாளர் 4 நாட்களுக்குள் தனது விசாரணையினை முடித்து தனது பரிந்துரையினை வட்டாட்சியருக்கு அனுப்ப வேண்டும்.

வட்டாட்சியர் தனது விசாரணையினை 6 நாட்களுக்குள் முடித்து மனுதாரருக்கு சான்று வழங்க ஆவண செய்யவேண்டும்.

- மனு ஏற்கப்பட்டதற்கான குறுந்தகவல் கிடைக்கப்பெற்றவுடன் மனுதாரர் இணைய வசதியுள்ள எந்த இடத்திலும் வாரிசு சான்றினை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
- மாவட்ட இணையதளத்தில் வட்டவாரியாக வாரிசுச் சான்று வழங்கப்பட்ட விவரத்தினை பார்வையிடும் வசதி ஏற்படுத்தப்பட வேண்டும்.
- வாரிசுச் சான்று வழங்கப்பட்டவுடன், அதனை Reginet மென்பொருளுடன் இணைக்கும் பொருட்டு அதன் நகலினை பதிவுத்துறைக்கு அனுப்பப்பட வேண்டும்.

7. **<u>இந்து வாரிசுரிமைச்சட்டம் 1956 பிரிவு 8 –ன்படியான மறைமுக வாரிசுகள் (அ) பிரிவு II – இரண்டாம் நிலை வாரிசுகள்</u>**

I. தந்தை

II. (1) மகனுடைய மகளின் மகன்.
(2) மகனுடைய மகளின் மகள்.
(3) உடன் பிறந்தவன்.
(4) உடன் பிறந்தவள்.

III. (1) மகளுடைய மகனின் மகன்.
(2) மகளுடைய மகனின் மகள்.
(3) மகளுடைய மகளின் மகன்.
(4) மகளுடைய மகளின் மகள்.

IV. (1) உடன் பிறந்தவனின் மகன்.
(2) உடன் பிறந்தவளின் மகன்.
(3) உடன் பிறந்தவனின் மகள்.
(4) உடன் பிறந்தவளின் மகள்.

V. தந்தையின் தந்தை, தந்தையின் தாய்.

VI. தந்தையின் விதவை,உடன் பிறந்தவளின் விதவை.

VII. தந்ததையின் உடன் பிறந்தவன், தந்தையின் உடன்பிறந்தவள்.

VIII. தாயின் தந்தை, தாயின் தாய்.

IX. தாயின் உடன் பிறந்தவன், தாயின் உடன் பிறந்தவள்.

**விளக்கம்: மேற்கண்ட பட்டியலில், உடன் பிறந்தவனை அல்லது உடன் பிறந்தவளைச் சுட்டும் குறிப்புகள், "ஒரே தாய் இரு தந்தை வழி உறவு" (Brother or Sister by Uterine Blood) கொண்ட உடன் பிறந்தவனை அல்லது உடன் பிறந்தவளைச் சுட்டும் குறிப்புகளை உள்ளடக்குவதில்லை.**

## 8. பொதுவான அறிவுரைகள்

வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களால் அரசிற்கு பரிந்துரைக்கப்பட்ட D.Dis. RA V (3) / 74529 / 2001 நாள்: 28.02.2003 கடிதத்தில் பொதுமக்கள் வாரிசுச் சான்று கோரி காலத்தாமதமாக விண்ணப்பிப்பதால் பல்வேறு சிக்கல்கள் உருவாவதுடன் உரிய விசாரணைக்கு உட்படுத்தப்படும் நிலையிலும் வாரிசுகள் குறித்த உண்மைகள் மறைக்கப்படுவதால் வாரிசுகளின் விவரங்களை கண்டறிய இயலவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இரண்டாம் நிலை வாரிசுதாரர்களுக்கு வாரிசுச் சான்று வழங்குவதால் பல்வேறு சட்ட சிக்கல்கள் உருவாவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, முதல் நிலை வாரிசுகள் (அ) இந்து வாரிசுரிமைச்சட்டம் 1956 பிரிவு 8 –ன்படி நேரடி வாரிசுகளாக குறிப்பிடப்பட்ட வாரிசுகளுக்கு மட்டும் வட்டாட்சியர்கள் வாரிசுச் சான்று வழங்கலாம்.

**வட்டாட்சியர்கள் கீழ்கண்ட இனங்களுக்கு வாரிசுச் சான்று வழங்கக்கூடாது**

அ. இந்து வாரிசுரிமைச்சட்டம் 1956 பிரிவு 8 –ன்படியான மறைமுக வாரிசுகள் (அ) பிரிவு II – இரண்டாம் நிலை வாரிசுகள்

ஆ. இறந்தவரின் உடன்பிறப்புகள் இரண்டாம் நிலை வாரிசுகள் ஆதலால், அவர்கள் வட்டாட்சியரிடம் வாரிசுச் சான்று கோர இயலாது. ஆனால் அவர்களின் தந்தையார் மற்றும் தாயார் ஆகியோர் வயது முதிர்ந்தவராகவோ, கல்லாதவராகவோ இருக்கும்பட்சத்தில் அவர்கள் வாரிசுச் சான்று பெறும் பொருட்டு வட்டாட்சியருக்கு மனுசெய்யலாம்.

இ. இறந்தவருக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட மனைவியோ/ கணவரோ இருக்கும் போது

ஈ. இறந்தவரின் சொத்துக்களை பிரித்துக் கொள்வதில் பிரச்சனை ஏற்படும் போது

உ. ஒருவர் 7 ஆண்டுகள் காணாமல் போனதாலோ (அ) குடும்பத்தை விட்டுச் சென்றதாலோ இறந்ததாக அறிவிக்கப்பட்ட இனங்களில்.

ஊ. இந்திய வாரிசுரிமைச் சட்டம் 1925 –ன்கீழ் வரக்கூடிய இனங்கள்.

மேற்படி இனங்கள் தொடர்பான மனுக்கள் வட்டாட்சியருக்கு வரப்பெறும் பட்சத்தில் நீதிமன்றத்தை அணுகி வாரிசுச் சான்று பெற்றுக்கொள்ளுமாறு மனுதாரரை அறிவுறுத்தலாம்.

**9. மேல்முறையீடு**

வட்டாட்சியரால் வழங்கப்பட்ட வாரிசுச் சான்றில் முரண்பாடுகள் ஏற்படும் நிலையில் திருத்தங்கள் செய்ய வேண்டியிருப்பின், சான்று வழங்கப்பட்ட நாளிலிருந்து ஓராண்டிற்குள் சம்பந்தப்பட்ட கோட்டாட்சியரிடம் மேல்முறையீடு செய்து கொள்ளலாம்.

**10. சீராய்வு அதிகாரம்**

வட்டாட்சியரால் வழங்கப்பட்ட வாரிசுச் சான்றினை மாற்றிட அல்லது திருத்தம் செய்திட வேண்டுமெனில் சான்று பெற்ற மூன்று ஆண்டுகளுக்குள் மாவட்ட ஆட்சியருக்கு சீராய்வு மனு அளிக்கப்பட வேண்டும்.

அனைத்து வட்டாட்சியர்களும், இச்சுற்றறிக்கையினை தங்களுடைய கீழ்நிலை அலுவலர்களுக்கு அனுப்பி, மேலே குறிப்பிடப்பட்டுள்ள நெறிமுறைகளை முறையாக பின்பற்றி வாரிசுச் சான்று வழங்க அறிவுறுத்தும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் இச்சுற்றறிக்கையினை பெற்றுக் கொண்டமைக்கு உடன் ஒப்புதல் அளிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மாவட்ட வருவாய் அலுவலர்,
வேலூர்.

பெறுநர்

1. அனைத்து சார்ஆட்சியர்கள்.
2. அனைத்து வட்டாட்சியர்கள்
3. ஜி2 – இருப்புக்கோப்பு.

நகல்:

கூடுதல் தலைமை செயலர் (ம) வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை ஆணையர், சென்னை அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.